## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (06.04.2024 முதல் 10.04.2024)

**அறிக்கை எண் 028/2024** **தேதி.05.04.2024**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### ஈரோடு மாவட்டத்தின் கடந்த வார வானிலை

ஈரோடு மாவட்டத்தின்' 02.04.24 முதல் 04.04.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 38°செ முதல் 39°C ஆகவும் இரவுநேரவெப்பநிலை 25°C முதல் 27°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7-10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை 02.04.2024 முதல் 04.04.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 10.04.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 02/04 | 03/04 | 04/04 | தேதி | நாள்-1 06/04 | நாள்-2 07/04 | நாள்-3 08/04 | நாள்-4 09/04 | நாள்-5 10/04 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 1 |
| 38 | 39 | 38 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 41 | 41 | 40 | 40 | 40 |
| 25 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 24 | 24 | 24 |
| 4 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 3 | 2 | 0 | 4 |
| 63 | 73 | 70 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 50 | 60 | 60 | 70 |
| 20 | 23 | 20 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 20 | 20 | 20 | 20 | 30 |
| 10 | 7 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 10 | 12 | 10 |
| 90 | 110 | 70 | காற்று வீசும் திசை | 180 | 180 | 140 | 110 | 140 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (06.04.2024 முதல் 10.04.2024)

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 10.04.2024 -ம் தேதியில் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 40°செ முதல் 41°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

சராசரியாக காற்று மணிக்கு 8-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **06-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **07-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **08-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **09-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **10-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 8 - 12 கி.மீ வேகமான காற்றுடன் பொதுவாக தெளிவான வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை சராசரியினைவிட $1-2^{\circ}$ கூடுதலாக உயர வாய்ப்புள்ளது. உள் மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை $39^{\circ}$ செல்சியஸ் க்கு மேல் கூடுதலாக வாய்ப்புள்ளது. அதே சமயம் காற்றின் ஈரப்பதம் குறைந்து வருகிறது. மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும். நீர் பாசனத்திற்கு குறைந்த அளவு தண்ணீர் இருக்கும் இடங்களில் மண் மூடாக்கு (மண்ணின் மேற்புறத்திலுள்ள 2 முதல் 3 செ மீ ஆழத்திற்கு கிளறி விடுதல்) செய்யவும். உயர்ந்து வரும் வெப்பநிலை காரணமாக மாலைவேளைகளில் கோடை மழையுடன் இடியும் மின்னலும் சேர்ந்து வரக்கூடும். சரிவுக்கு குறுக்காக மண் புரட்டிபோடும் கலப்பை கொண்டு கோடை உழவினை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர். |
| கம்பு | **நிலம் தயாரித்தல்** | நிலவும் வறண்ட வானிலை கருத்தில் கொண்டு இறவை கம்பு விதைப்பினை தொடர்ந்து நீர்பாசனமும் மற்றும் 3வது நாள் உயிர்நீர் பானமும் அளிக்கவேண்டும். |
| வாழை | வளர்பருவம் | பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை உயர்ந்தும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் குறைந்தும் காணப்படுவதால் மதியம் 2 மணி முதல் 3 மணி வரை உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று ஏற்பட வாய்ப்புள்ளது, எனவே 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| தென்னை | | கோடை காலத்தில் பெறப்படும் மழையினை வேர் பகுதியல் சேமிக்கும் வகையில் மரத்தினை சுற்றிலும் பாத்திகளை உள்நோக்கி சாய்வாக ஆழப்படுத்தவும், |
| கால்நடைகள் | | உயர்ந்துவரும் வெப்பநிலை மற்றும் குறைந்து வரும் காற்றின் ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு வெப்பஅழுற்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும். கால்நடைக்குடில்களைச் சுற்றிலும் ஈரமான சாக்குகளை தொங்கவிடவும். கால்நடைகளை வெயில் நேரத்தில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம். |

### குறுஞ்செய்தி

- வெப்பநிலை உயர்ந்து காற்றின் ஈரப்பதம் குறைந்து காணப்படுவதால் கால்நடைகளுக்கு

முதன்மைஅலுவலர் (GKMS)
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை